**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**அசல் வழக்கு எண் : 168/2018**
**நாள் : 20/06/2023, செவ்வாய்க்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பின் 1-வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10-வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் - குமார் | த/பெயர் - நரசிம்மன் |
| வயது - 42 | தொழில் - |
| விலாசம் - எண்.4, யுனைடட் காலனி, 2வது குறுக்கு தெரு, கொளத்தூர், சென்னை - 99. | |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (PW1)**

இடம் வாங்கி 6, 7 ஆண்டுகள் கழித்து தான் வீடு கட்டியதாக நீங்கள் சொல்லியிருப்பது தவறு என்றால் நான் 2005ல் இடம் வாங்கி 1, 2 ஆண்டுகளில் வீடு கட்டினேன். நீங்கள் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணம் 2004ல் ஏற்பட்டது என்றும் அதுவே தெரியாமல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு பக்கத்திலேயே அடுக்குமாடி குடியிருப்பு உள்ளது. அந்த அடுக்குமாடி குடியிருப்பு அனுமதி பெற்று தான் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு அனுமதி வாங்கப்பட வேண்டும் என்றால் அதிகாரிகள் வந்து ஆய்வு செய்வார்கள் என்றால் சரிதான். நீங்கள் அனுமதி பெற்று தான் வீடு கட்டியுள்ளீர்களா என்றால் நான் அனுமதி பெறவில்லை. எனது வீடு தரைத்தளம் மற்றும் முதல்தளம் உள்ளது. முதல்தளம் 2019ல் கட்ட ஆரம்பித்தேன். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது முதல்தளம் கட்டப்பட்ட விவரத்தை தங்கள் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் குறிப்பிடவில்லை. தாவா சொத்தின் அசல் கிரைய ஆவணம் என்னிடம் தான் உள்ளது. தாவா

சொத்து குறித்து அசல் ஆவணம் இருக்கும்போது எதற்கு சான்றிட்ட நகலை தாக்கல் செய்தீர்கள் என்று கேட்டால் மூலபத்திரத்தின் நகல் என்னிடம் இல்லாததால் சான்றிட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.த.சா.ஆ.1 சான்றிட்ட ஆவணம் என்றால் சரிதான். அசல் ஆவணம் எங்கு உள்ளது என்றால் தெரியவில்லை. சாட்சி மேலும் வா.த.சா.ஆ.1 என்ன ஆவணம் என்று தெரியாது என்று கூறுகிறார். 1ம் பிரதிவாதி விஜயகுமார் அவர்களின் சொத்தின் நீள, அகலம் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் சொத்து விவரம் தெரியவில்லை என்றும், வழக்கின் ஆவணங்களை பற்றியும் தங்களுக்கு தெரியவில்லை என்றும், நீங்கள் யாரிடம் சொத்தை கேட்கிறீர்கள் என்ற அடிப்படை விவரமும் தெரியாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப் பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**//கையொப்பம்//**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பொன்னேரி.**